978 செப்டம்பர் 11]

(இ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1978-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

6. ஒழுங்குப் பிரச்சினை

நிகழ்ச்சி நிரல்படி தனித்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பொருள்பற்றிய அரை மணி நேர விவாதத்தை எடுத்துக் கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 11

திரு. க. சுப்பு : கொடுக்கப்பட்டிருக்கின்ற அஜெண்டாவில் குறிப்பிட்டிருப்பதுபோல் 142-வது விதியின்படி கொடுக்கப் பட்டிருக்கின்ற தீர்மானம்தான் வரவேண்டும். அதை எடுத்துக் கொள்வதுதான் நல்லது.

திரு. துரை முருகன் : நானும் அதைப்போன்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன் என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அஜென்டாவின்படி பார்த்தால் இதில் இருக்கின்ற மசோதாக்களை எல்லாம் எடுத்துவிட்டு உங்கள் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்போது நேரமில்லை. இவையெல்லாம் நாளை எடுத்துக்கொள்ளப்படும். நிகழ்ச்சி நிரலில் சேர்ந்து விட்டபடியால் இவையெல்லாம் தள்ளுபடி செய்யப்பட மாட்டாது. இப்போது அரை மணிநேர விவாதத்தை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

7. அரைமணி விவாதம்.

முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி 1977—ல் தமிழகத் திற்குத் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்தபோது ஏற்பட்ட செலவு குறித்து.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே.....

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பாயிண்ட் ஆப் ஆர்டர், மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் ஒரு பொருள் குறித்து அரை மணி நேர விவாதம் வேண்டுமென்று கொடுத்திருக்கின்ற தீர்மானத்தை நான் ஆட்சேபிக்கின்றேன். சட்டமன்ற விதிகள் 40-வதின் விதியின்கீழ் சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் கொண்டால் இந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்ற விஷயம், நிர்வாக நடைமுறைபற்றிய ஒன்று. வேறு ஏதாவது இதில் முக்கியத்துவம் இருந்தால் அனுமதித்திருக்கலாம். இந்த விஷயத்தைப் பொறுத்த அளவில் தாங்கள் இதை அனுமதித் திருக்கக்கூடாது. இது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று அல்ல. ஆகவே இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது தான் என்னுடைய ஆட்சேபணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதித்திருக்கக் கூடாது என்று நீங்கள் சொல்ல முடியாது. அனுமதித்திருக்க வேண்டிய தேவையில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். 40-வது விதியில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "The Speaker may allot half an hour on three sittings in a week for raising a discussion on a matter of sufficient public